

# தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் எதை நோக்கி...?

வி. சிவலிங்கம்

உலகம் முழுவதிலும் ஓர் விரைவான மாற்றம் நிகழ்ந்து வருகிறது.

தொழில் நுட்பம், மற்றும் தகவல் தொடர்புத் துறைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களும், பொருளாதார உற்பத்தி உறவுகளில் காணப்படும் மாற்றங்களும் உலகத்தை சிறு கிராமமாக மாற்றியுள்ளன. கடந்த 25 வருடங்களாக செயற்பாட்டில் இருந்து வரும் திறந்த பொருளாதார நடைமுறைகள், பல்வேறு நாடுகளின் பொருளாதாரக் கட்டுமானங்கள், அதற்கேற்றவாறான அரசியல் அமைப்பு மாற்றங்கள் என்பனவற்றைத் தூண்டியுள்ளன.

உலகப் பொருளாதார உறவு முறைகளில் ஏற்பட்டு வரும் துரித மாற்றங்களால் நாட்டின் எல்லைகள் அகலத் திறந்து விடப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் தேசியம், இறைமை என்ற கோட்பாடுகளின் காரணமாக,

> **“ஒரு நாட்டில் நிலவும் பொருளாதார ஒழுங்கு முறையே அதன் அரசியல் கட்டுமானத்தையும் தீர்மானிக்கிறது.”**

நாட்டின் எல்லைகள் மூடப்பட்டு அதன் பொருளாதாரமும் மூடியதாகவே அமைந்திருந்தது. தேசங்களின் இவ்வாறான மூடிய பொருளாதார உறவுகளால் பல நன்மைகளுடன் கூடவே தீமைகளும் இருந்தன. கலாச்சாரம், பண்பாடு, உள்ளூர்க் கைத்தொழில் என்பன விருத்தியடைந்த அதேவேளை, நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சிக்கு ஏற்றாற் போல் பொருளாதார வளர்ச்சி ஏற்படவில்லை.

தற்போது அறிமுகமாகியுள்ள திறந்த பொருளாதாரம் தேசிய பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் மந்த நிலையைப் போக்கி, துரித வளர்ச்சிக்கு எடுத்துச் செல்லும் என்ற நோக்கில், கட்டுப்பாடற்ற விதத்தில் நாட்டின் எல்லைகள் வெளிநாட்டு முதலீடு என்ற போர்வையில் திறந்து விடப்பட்டன. இதன் காரணமாக ஓர் கலாச்சார ஊடுருவலும் நடந்தேறி வருகிறது.

கட்டுப்பாடற்ற பொருளாதார நடவடிக்கைகளின் பின்னால் பல பல்தேசிய நிறுவனங்களே உள்ளன. பல நாடுகளின் மொத்த தேசிய வருமானங்களைவிட பல மடங்கு வருமானத்தைப் பெறும் இப்பல்தேசிய நிறுவனங்கள், தேசிய அரசுகளை மாற்றி அமைக்கும் சக்தி வாய்ந்தனவாகவும் உள்ளன.

இவ்வாறான சர்வதேசிய பின்னணியை அடித்தளமாகக் கொண்டே இலங்கையில் நிலவும் இன்றைய அரசியல் பிரச்சினைகள் குறிப்பாக தேசியவாதம், சுயநிர்ணய உரிமை என்ற கோரிக்கைகள் ஆராயப் படுகின்றன.

ஒரு நாட்டில் நிலவும் பொருளாதார ஒழுங்கு முறையே அதன் அரசியல் கட்டுமானத்தையும் தீர்மானிக்கிறது. அந்த வகையில் இலங்கையில் நிலவும் பொருளாதார செயற்பாடுகளை அவதானிப்போமாயின் அதற்கேற்றாற்போல் அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

எழுபதுகளின் பிற்பகுதியில் உலகம் முழுவதிலும் மிகவும் தீவிரமாக அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கோட்பாடுகள், ஏற்றுமதி வர்த்தகத்தில், குறிப்பாக, அந்நியச்செலாவணி வருமானத்தில் பெரிதும் தங்கியுள்ள நாடுகள், அதன் உள்நாட்டுச் சந்தையை திறந்து விடவேண்டும் என வற்புறுத்தப் பட்டன. இதன் மூலம் உள்நாட்டு மூலவளங்களை அதிக பட்சம் பயன்படுத்தலாம் எனவும், வெளிநாட்டுத் தொழில்நுட்பங்கள் நாட்டுக்குள் நுழைவதால் உள்நாட்டு உற்பத்தியின் தரம் அதிகரித்து பொருளாதார வளர்ச்சியும், வேலைவாய்ப்பும் பெருகும் எனவும் வாதிடப்பட்டது.

வெளிநாட்டு முதலீடுகளுக்கு நாட்டின் பொருளாதாரம் திறந்துவிடப்படும்போது, அதன் நடவடிக்கைகளில் அரசின் தலையீடு இருக்கக் கூடாது எனவும், சந்தையின் சுமுகமான செயற்பாடுகளுக்கு பங்கம் தரும் வகையில் சட்டங்கள் இருப்பின் அவை தளர்த்தப்பட வேண்டுமெனவும், பதிலாக அப்பொறிமுறை நன்கு செயற்படுவதை உறுதி செய்யும் வகையில் அரசு சட்டங்கள் இயற்ற வேண்டும் என்பதும் நிபந்தனையாகிறது.



பொருளாதார உறவுகளை சுமுகமாக்குவதற்கு சட்டங்கள் இயற்றப்பட வேண்டு

மாயின், பாராளுமன்றம் இதற்கு ஏற்றாற்போல் ஒத்துழைக்க வேண்டும். ஆனால், இலங்கையின் அரசியல் இத்தகைய மாற்றத்தை துரிதமாக ஏற்றுக் கொள்ளும் நிலையில் காணப்படவில்லை. குறிப்பாக, அரசியல் கட்சிகள் மத்தியிலே இக்கொள்கை பற்றிய பொதுவான உடன்பாடு இல்லாமை, தொழிற்சங்கங்களின் பலம் என்பன பொருளாதாரத் தீர்மானங்களை துரித கதியில் மேற்கொள்வது சாத்தியமற்றது எனக் கருதப்பட்டதால் தனி மனிதரின் கையில் அதிகாரங்களைக் குவிப்பது அவசியத் தேவையாக உணரப்பட்டு அதற்கு ஏற்றவாறான அரசியல் அமைப்பை நோக்கி பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பொருளாதாரக் காரணிகளை மையமாக வைத்தே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டதாயினும் அதற்கான பலமான அரசியல் காரணங்களும் இருந்தன. 1970ம் ஆண்டு முதல் 1977 வரை சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன இணைந்த ஐக்கிய முன்னணி அரசு பதவியிலிருந்தது. இவ் இடைக்காலத்தில் நாட்டின் ஏகாபதி பத்திய ஆதரவு அரசியல் அமைப்பு மாற்றப்பட்டு முதலாவது குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டு, சுதந்திர நாடாக மாற்றப்பட்டது. இம்மாற்றத்தைத் தொடர்ந்து தேசிய பொருளாதாரத்தைச் சீரமைக்கும் விதத்தில் பல தேசிய உற்பத்தித் துறைகள் தேசிய மயமாக்கப்பட்டன. அத்துடன் மக்கள் தமது எதிர்காலத்தைத் தாமே தீர்மானிக்கும் விதத்திலான பல ஜனநாயக விஸ்தரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இவை யாவற்றையும் மாற்றி அமைக்க வேண்டிய தேவையும் திறந்த பொருளாதாரத்தை ஆதரிப்பவர்களின் தேவையாக அமைந்தது.

இதே காலத்தில் தமிழ்ப்பகுதிகளில் ஆயுதப் போராட்டத்திற்கான, குறிப்பாக, பிரிவினைக் கோரிக்கைகள் தீவிரமடைந்து காணப்பட்டன. இதுவரை காலமும் பாராளுமன்றத்திற்குள் விவாதிக்கப்படும் பிரச்சினையாக அமைந்த இனப்பிரச்சினை, அவ்வப்போது அகிம்சாவழிப் போராட்டங்களாகவும் இருந்த நிலைமாறி, பாராளுமன்றத்திற்கு வெளியில் பேசப்படும் பிரச்சினையாக மாறிச் சென்றது. மிக உக்கிரமாக வளர்ந்து சென்ற இப்பிரச்சினையைப் பாராளுமன்றத்தால் கையாள முடியாது எனக் கருதி, பலம் பொருந்திய அதிகார அமைப்பினால் மட்டுமே பிரிவினை வாதத்தினையும், பயங்கரவாதத்தினையும் கையாளலாம் எனவும் கருதியே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டுவரப்பட்டது. இவ்வாட்சிமுறையைக் கொண்டு வருவதற்கு பொருளாதாரக் காரணங்களே மிக முக்கியமானவைகளாக இருந்த போதிலும், இவை மிகவும் திட்டமிடப்பட்ட விதத்தில் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியிலே மறைக்கப்பட்டு இனப்பிரச்சினையே கூர்மைப்படுத்தப் பட்டது.

**“பலம் பொருந்திய அதிகார அமைப்பினால் மட்டுமே பிரிவினை வாதத்தினையும், பயங்கரவாதத்தினையும் கையாளலாம் எனக் கருதியே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டுவரப்பட்டது.”**

**“குடும்பம் என்ற சமூகக் கட்டுமானம் முன்னெப்போதையும் விட மிக அதிகளவு அழுத்தத்தை அனுபவிக்கிறது.”**

புதிய அரசியல் அமைப்பின் தோற்றத்திற்கான அரசியல் மற்றும் பொருளாதாரப் பின்னணி இவ்வாறு இருந்தபோதிலும், இனப்பிரச்சினையானது ஆயுதப் போராட்டமாக தொடர்ந்து உக்கிரமடைந்து சென்ற போதிலும், அது பொருளாதார செயற்பாடுகளுக்கு மிகவும் தடையாக இருந்த போதிலும், கடந்த 25 வருடங்களுக்கு மேலாக வெளிநாட்டு முதலீடுகள் நாட்டுக்குள் நுழைந்தன. இது எவ்வாறு சாத்தியமாயிற்று?

கடந்த 25 வருட காலத்திற்குள் நாட்டின் பிரதான மூலவளத்துறைகள் தனியார் மயமாக்கப்பட்டன. அரச கட்டுப்பாட்டிலிருந்த பல உற்பத்தித்துறைகள் தனியார் கம்பனிகளுக்குக் கையளிக்கப்பட்டன. இதனால் பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இதனை எதிர்த்து போராட்டம் செய்ய முடியாதவாறு நாட்டில் நிலவும் போரைக் காரணமாக வைத்து அவசரகால நிலையைப் பிறப்பித்து தடை செய்தனர். போரை மையமாக வைத்துப் பிறப்பிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தொழிலாளர்கள், அரசியல் எதிரிகள் துன்புறுத்தப்பட்டனர். குறிப்பாக இப்போர்க்காலங்களில் எதிர்க்கட்சிகள் செயற்பட முடியாத நிலை காணப்பட்டது.

கடந்த கால் நூற்றாண்டிற்குள் போர்ப் பின்னணியைக் காரணம் காட்டி மிகப் பிரமாண்டமான அளவில் இராணுவ அமைப்புகள் தோற்றுவிக்கப் பட்டன. உளவுத்துறை என்பது அரசியல், தொழிற்சங்கம், ஊடகம் போன்ற பல்வேறு துறைகளுக்குள் விஸ்தரிக்



கப்பட்டு அரசாங்கத்தின் முக்கிய தீர்மானங்களில் பெருமளவு ஆதிக்கம் செலுத்தும் நிலைமைக்கு பாது காப்புத்துறை வளர்ந்துள்ளது.

திறந்த பொருளாதாரத்தால் ஏற்பட்ட சமச்சீரற்ற பொருளாதார வளர்ச்சி அதிக மக்களை வறுமைக் கோட்டின் கீழ் தள்ளியுள்ளது. கிராமியப் பொருளா தாரம் சீரழிந்து அங்கு வேலையற்றோர் தொகை பெருகியுள்ளது. பொருளாதார ரீதியாக நலிவுற்ற மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியக் கொடுப் பனவுகள் நிறுத்தப்பட்டதால் சிறுவர்களுக்கான சத்துணவுப் பொருட்களின் விலை அதிகரித்ததால் சிறுவர் மரணங்கள் அதிகரித்தன. குடும்பத் தொல்லை கள் அதிகரித்ததால் தற்கொலை விகிதமும் அதிக ரித்தது. மொத்தத்தில் குடும்பம் என்ற சமூகக் கட்டு மானம் முன்னெப்போதையும்விட மிக அதிகளவு அழுத் தத்தை அனுபவிக்கிறது.

நாட்டின் பாரம்பரிய கைத்தொழில் துறைகள் கட்டுப்பாடற்ற இறக்குமதி வர்த்தகத்தால் நலிவடைந் ததால் மக்கள் வேலை தேடி நகர்ப்புறங்களை நோக்கி விரைந்தனர். தனிமனித இச்சைகளுக்கு சுதந்திரமான வாய்ப்புகளைத் திறந்த பொருளாதாரம் வழங்கியதால் நகர்ப்புறங்கள் குற்றச் செயல்களின் மையங்களாகின. இதனால் நகரப்புற, நாட்டுப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரும் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது.

சிங்களவர்களே. இம்மக்களை ஒடுக்க இராணுவமே பயன்படுத்தப்பட்டது. இவர்கள் மிகவும் கொடூரமான விதத்தில், தமிழ்மக்கள் எவ்வாறான துன்பத்திற் குள்ளாக்கப்பட்டார்களோ அதேயளவு கொடுமை களுக்குள்ளாக்கப்பட்டார்கள். ஜே. வி. பி. இனர் பேரின வாதிகள் என்றால் இவர்களைப் பாதுகாக்கும் இராணுவம் எவ்வாறு இவர்கள் மேல் ஏவிவிடப்பட்டது?

தேசியவாதம் என்பது வலதுசாரிச் சந்தர்ப்ப வாதிகளின் தந்திரோபாயமே தவிர வேறு எதுவுமல்ல. தமது இருப்பைப் பலப்படுத்தவும், அதிகாரத்தைக் கைப்பிடிக்கவும் தேசியவாதம் என்ற கோஷத்தை இவர்கள் முன்வைக்கின்றனர். இந்த மூலோபாயத்தைக் கையாள்வதில் தமிழ், சிங்கள அரசியல் சக்திகள் மத்தியிலே வேறுபாடுகள் இல்லை. இரு சாராருக்கும் இராணுவமே மிகப் பெரும் பலமாக உள்ளது. நாட்டில் பயங்கரவாதம், பிரிவினைவாதம் எனக்கூறி எவ்வாறு அரச இராணுவம் கட்டப்படுகிறதோ இதேபோன்று தமிழ்த் தேசியவாதம், சிங்கள பேரினவாத எதிர்ப்பு என்ற கோஷங்களின் பின்னால் பலமுள்ள தமிழ் இராணுவம் கட்டப்படுகிறது. திறந்த பொருளா தாரத்தின் கொடுமையான அம்சங்களால் ஏற்பட்டு வரும் சமூக முரண்பாடுகள், போரைக் காரணியாக முன்வைத்து எவ்வாறு ஒடுக்கப்படுகின்றனவோ, அதேபோன்று தமிழ் மக்கள்மீது சுமத்தப்படும்

**“தமிழ்த் தலைமைகள் குறிப்பிடுவது போல சிங்கள ஆட்சியினர் மகாவம்ச மனநிலையில் இருப்பதாக எடுத்துக் கொண்டால் சிங்கள மக்கள் மத்தியிலே இத்தனை பொருளாதார இடைவெளிகளும், குழப்பங்களும் நிகழ்வதற்குக் காரணம் என்ன?”**

இத்தகைய சமூக ஏற்றத்தாழ்வுகள் திறந்த பொருளாதாரத்தினால் மிகவும் கூர்மை அடைந்த நிலையில் அரசியலும் அதற்கு ஏற்றவாறு மாறிச் சென்றுள்ளது. தேசத்தின் இறைமை, சுயநிர்ணய உரிமை என்பன அர்த்தமற்ற கோட்பாடுகளாகி உள்ளன. தேசத்தின் அரசியல், மற்றும் பொருளாதார கொள்கைகள் தொடர்பாக சுதந்திரமான கொள் கையை முன்னெடுக்க முடியாத நிலையில் அரசு யந்திரம் உள்ளது. இன்று தமிழ்த் தலைமைகள் குறிப்பிடுவது போல, சிங்கள ஆட்சியினர் ‘மகாவம்ச’ மனநிலையில் இருப்பதாக எடுத்துக் கொண்டால், சிங்கள மக்கள் மத்தியிலே இத்தனை பொருளாதார இடைவெளிகளும், குழப்பங்களும் நிகழ்வதற்குக் காரணம் என்ன? ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல சமச்சீரற்ற பொருளாதாரமும் இதனால் ஏற்பட்டு வரும் சமூக முரண்பாடுகளை ஒடுக்க அரசு யந்திரம் பயன் படுத்தப்பட்ட விதத்தையும் நாம் ஆராய்வோமாயின் ‘மகாவம்ச’ மனநிலைவாதம் அடிபட்டுப் போகிறது. சாமான்ய மக்களின் பொருளாதார விடுதலைக்காக குரல் கொடுக்கும் ஜே.வி.பி. ஊடகவியலாளர்கள், மாணவர்கள், தொழிற்சங்கவாதிகள், அரசியல் வாதிகள் போன்றோர் தமிழர்கள் அல்ல. அனைவரும்

பொருளாதார, மற்றும் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமிழ் இராணுவம் பயன்படுத்தப்படுகிறது. இரு சாராருக்கும் தேசியவாதம் என்ற போலிவாதமே பக்கபலமாக உள்ளது.

நாட்டின் பொருளாதார எல்லைகளை அந்நிய நாடுகளின் சந்தையாக மாற்றியுள்ள ஆட்சியினர், வளர்ந்துவரும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சரி செய்ய முடியாத ஓர் அரசு தனது இறைமை அதிகாரம் பற்றிப் பேசுவது போலியானது, அர்த்தமற்றது.

தேசியவாதத்திற்குள் புதைந்து கிடக்கும் சுயநிர்ணய உரிமை, இறைமை அதிகாரம் என்பன போலித்தனமானவை. தேசத் தின் எல்லைக்குள் நிகழும் பொருளாதார உறவுகளில் மாற்றம் செய்ய வலுவற்ற, இன்னும் அவை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாத அரசுகளால் எவ்வாறு தமது சுயநிர்ணய உரிமை யையோ, அல்லது இறைமை அதிகாரத்தையோ பிரயோ கிக்க முடியும்?



**"தேசியம் என்பது வெறுமனே மொழி, எல்லை, பாரம்பரியம் என்ற வரையறுப்புகளூடாக அமைந்தது அல்ல."**

இப்படி இருக்கும்பொழுது தமிழ்த் தலைமைகளால் முன்வைக்கப்படும் சுயநிர்ணய உரிமை, இறைமை என்பன எவ்வளவு பலவீனமானவை என்பதை விப ரிக்கத் தேவையில்லை. சிங்கள ஆட்சியாளர் களால் பாதுகாக்க முடியாத ஒன்றைத் தாம் பாதுகாக்கப் போவதாகக் கூறி மக்களை வழிநடத்திச் செல்வது ஓர் ஏமாற்று வித்தையேயாகும். தமிழர்கள் பாரம்பரிய வாழ்வு உரிமையாலும், ஒரே மொழி பேசுவதாலும், ஒரே உளவியல் போக்கைக் கொண்ட பிரதேசத்தில் வாழ்வதாலும் அவர்கள் ஒரு தேசியம் எனக் கோட் பாட்டு அடிப்படையில் கூறி தமிழர் ஒரு தேசியம் என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது.

இவை தேசியம் என்பதை அடையாளப்படுத்து வதற்கான அறிமுகமே தவிர, இவை மட்டும் தேசிய உருவாக்கத்தின் அம்சங்களாக அமைந்து விடுவ தில்லை. தேசிய உருவாக்கம் என்பது உள்ளார்ந்த ரீதியில் கட்டப்படுகிறதா? என்பதும், அதன் பொதுவான கலாச்சாரம், பண்பாடு, வாழ்வியல் என்பன தொடர்ந்து வளர்ச்சியுற்றுச் செல்கிறதா? என்பதும், அச்சமூகம் வாழும் அவ்வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் இத்தேசிய உருவாக்கத்திற்கான காரணிகளாக அமைகின்றன.

மேலே குறித்த அம்சங்களை விரிவாகப் பார்க் கையில் தேசியம் என்பது வெறுமனே மொழி, எல்லை, பாரம்பரியம் என்ற வரையறுப்புகளூடாக மட்டும் அமைந்தது அல்ல என்பதை உணர முடியும்.

25 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் போராட் டம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டமும் இதே காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப் பட்ட திறந்த பொருளாதாரமும் இருவேறு அதிகார வர்க்கங்களை இரு பகுதியிலும் தோற்றுவித்திருப் பதையும், இதற்கான தோற்றுவாயாக அல்லது ஊக்கு சக்தியாக ஆயுதப் போராட்டம் அமைந்திருப்பதையும் காணலாம். இலங்கை அரசு பழமை வாய்ந்த அதிகார அமைப்பாக இருந்த போதிலும் நிறைவேற்று அதிகார முள்ள ஆட்சி அதிகாரத்தின் இருப்புக்கு பக்க பலமாக இருப்பதனையும் காணலாம்.

இலங்கை ஆட்சி அதிகாரமானது சட்டங்களை இயற்றும் இயல்பை படிப்படியாக இழந்து, சர்வதேச சட்டங்களின் பிரகாரம் ஒழுகும் ஓர் நிறுவனமாக மாறிவரும் இன்றைய சூழலில், தேசத்தின் சுயநிர்ணய உரிமை, இறைமை அதிகாரம் என்பவற்றை பெயரளவில் மட்டுமே கூறும் உரிமை கொண்டதாகவே உள்ளது. இவ்வாறான மிகவும் பலவீனமான அரசிடமிருந்து தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை, இறைமையை வேண்டிப் போராடுகிறார்கள் எனக் கூறுவது அர்த்தமற்றது. எனவே, இதற்காக ஆயிரக்கணக்கான மக்களைப் பலிகொடுப்பதும் நியாயமற்றது.

இரு தரப்பினருமே அக்கோரிக்கையிலுள்ள வெற்றுத் தன்மையை நன்கு அறிவர். அவ்வாறானால் இவர்கள் ஏன் இந்த வெற்றுக் கோஷங்களின் பின்னால் மக்களைப் பலி கொடுக்கிறார்கள்?

மக்கள் இதன் தாற்பரியத்தைப் புரிந்து கொள்ளாதவரை இக்கொடு மைகளுக்கு இரையாவதைத் தடுக்க முடியாது.

